அலங்கோல த.வெ.க. ஆட்சிக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்றால்

மதுராந்தகம் தொகுதியில் உதயசூரியனை வெற்றி பெறச் செய்வீர்!

மதுராந்தகத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!



மதுராந்தகம், செப். 29–

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் தேர்தல் பரப்புரை செய்தார். ஓரத்தியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் அவர் எழுச்சி மிக்க உரையாற்றினார்.

கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை வருமாறு:

முதலில் இவ்வளவு சிறப்பான, எழுச்சியான அன்பான வரவேற்பு கொடுத்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று முன்தினம் தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலுக்காக அங்கே பிரச்சாரத்திற்குப் போயிருந்தேன். நிச்சயம் தாராபுரத்திலும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக வெற்றி வேட்பாளர் வெற்றி பெறுவது உறுதி. அதைத் தொடர்ந்து மதுராந்தகம் தொகுதி முழுவதும் நம்முடைய வெற்றி வேட்பாளர் திரு. பரந்தாமன் அவர்களுக்காக உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்று தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறேன்.

உதயசூரியன் உதித்துவிட்டான்!

உங்களுடைய உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும், ஆரவாரத்தையும் பார்க்கும்போது நிச்சயம் இந்த இடைத்தேர்தலில், மதுராந்தகத்தில் உதயசூரியன் உதிக்கப் போவது உறுதி. உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, இந்த இடைத்தேர்தலில் மதுராந்தகத்தில் உதயசூரியன் உதித்துவிட்டான் என்கின்ற வெற்றிச் செய்தி வர வேண்டும்.

வருகிற 6–ஆம் தேதி தாராபுரத்திலும், இங்கே மதுராந்தகத்திலும் சட்டசபை இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. ஏற்கனவே இப்போதுதான் தேர்தல் முடிந்தது உங்களுக்குத் தெரியும். ஏப்ரல் 23–ஆம் தேதி தேர்தல் முடிந்தது. இப்போது மீண்டும் இன்னொரு இடைத்தேர்தல் வந்திருக்கிறது என்றால், இந்த இடைத்தேர்தல் இயற்கையாக வந்த இடைத்தேர்தலா? இந்த இடைத்தேர்தலை உங்களிடத்தில் திணித்தது யார்?

அதற்கு முன்னால் ஒரு சிறிய விஷயத்தை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இன்றைக்கு தேதி செப்டம்பர் 27. கடந்த ஆண்டு இதே செப்டம்பர் 27–ஆம் தேதி என்ன நடந்தது என்று நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்பவில்லை. உங்களுக்கே நினைவிருக்கும், மறந்திருக்க மாட்டீர்கள். கரூரில் பிரச்சாரக் கூட்டம் நடத்துகிறேன் என்று கூறி ஒரு கட்சியினுடைய தலைவர் கிட்டத்தட்ட 10 மணி நேரம் தாமதமாகப் போனார்.

உயிர்கள் பலி– கவலைப்படாமல் கிளம்பிவிட்டார்!

அங்கு பல ஆயிரக்கணக்கான மக்களை, மகளிரைக் கூட்டி வைத்து, குழந்தைகளை அடைத்து வைத்து, அவர்களை 10 மணி நேரம் வெயிலில் நிற்க வைத்து, குடிக்கத் தண்ணீர் கொடுக்காமல், கழிப்பறை வசதி ஏற்படுத்தித் தராமல், அவர்களைப் பட்டினி போட்டு நெரிசலில் கிட்டத்தட்ட 10 குழந்தைகள் உள்ளிட்ட 41 பேர் இறந்த நாள் இந்த செப்டம்பர் 27, நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். ஆனால் அந்த செப்டம்பர் 27, அந்த விபத்து நடந்தபோது, அதற்குக் காரணமான ஒருவர், அந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினாரா? மன்னிப்புக் கேட்டாரா? கரூரில் அந்தச் சம்பவம் நடக்கும்போது அந்தக் கட்சியின் தலைவர் பேசிக்கொண்டு இருக்கும்போதே கிட்டத்தட்ட உயிர்பலி தொடங்கிவிட்டது. பாதியில் பேசி முடித்துவிட்டுப் புறப்பட்டுவிட்டார். எதைப் பற்றியும் கவலைப்படாமல் கிளம்பிவிட்டார்.

கரூரிலிருந்து திருச்சி விமான நிலையத்திற்குப் போகும்போது, அங்கு பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் வழிமறித்துக் கேள்வி கேட்டார்கள். ``சார், பலரும் இறந்துவிட்டார்கள். இதற்கு ஏதாவது சொல்கிறீர்களா?” என்று கேட்கும்போது, ஏதாவது பதில் கூறினாரா? எந்தப் பொறுப்பும் எடுத்துக்கொள்ளவில்லை. எந்தப் பதிலும் கூறவில்லை. அதன்பிறகு திருச்சியிலிருந்து புறப்பட்டு சென்னைக்குச் சென்று சேர்ந்தார்.

சென்னை விமான நிலையத்தில் பொதுமக்களும், பத்திரிகையாளர்களும் வழிமறித்துக் கேள்வி கேட்டார்கள். ``சார், 41 பேர் இறந்துவிட்டார்கள். சார் கரூரில். நீங்கள் சென்ற கூட்டத்தில், நீங்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் 41 பேர் இறந்திருக்கிறார்கள் சார். ஏதாவது கூறுங்கள் சார்' என்றபோது, ஏதாவது பதில் கூறினாரா? எதுவும் கூறவில்லை. வாயைத் திறக்கவே இல்லை.

40 நாட்கள் தலைமறைவு!

ஆள் காணாமல் போய்விட்டார். வீட்டுக்குச் சென்றவர் வெளியே வரவில்லை, எந்தவிதமான செய்தியும் கிடையாது. அவர்தான் அப்படி என்றால், அவருடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள், அவருடைய கட்சித் தொண்டர்கள், இப்போது இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் இவர்கள் எல்லாம் ஒவ்வொருவரும் கிட்டத்தட்ட 40 நாட்கள் தலைமறைவாக இருந்தார்கள். அன்று கரூருக்குச் சென்று அந்த மக்களுக்குத் துணையாக நின்றது, ஆறுதலாக நின்றது யார்? நம்முடைய கழகத் தலைவர், அப்போது முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் அவர்கள் சென்று உடன் நின்றார். நான் அப்போது வெளிநாட்டுக்கு, என் குடும்பத்துடன் சென்று இருந்தேன். உடனே, புறப்பட்டு வந்து தலைவருடன் கூட இருந்து, அந்த மக்களுக்குக் கூட நின்று உதவி செய்தோம். நாங்கள் மட்டும் அல்ல, அனைத்து அமைச்சர் பெருமக்களும், நம்முடைய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், ஏன் இன்னும் சொல்லப்போனால், அ.தி.மு.க–வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள், அ.தி.மு.க–வின் நிர்வாகிகளும் அன்று மருத்துவமனைக்கு வந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்குத் துணையாக நின்றார்கள். ஆனால், அந்த விபத்திற்குக் காரணமானவர்கள் துணையாக நின்றார்களா என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

நம் தலைவரின் பெருந்தன்மை!

நம்முடைய தலைவர் அப்போதுகூடப் பெருந்தன்மையாக என்ன தெரியுமா கூறினார்? `இதை நான் அரசியல் ஆக்க விரும்பவில்லை'. அப்போது நம் தலைவர் முதலமைச்சராக இருந்தார். காவல்துறை அவருடைய கட்டுப்பாட்டில் இருந்தது. என்ன தெரியுமா கூறினார் தலைவர்? `எந்தத் தலைவரும் தன்னுடைய தொண்டனுடைய இறப்பில் அரசியல் செய்ய விரும்பமாட்டான். எந்தத் தலைவனும் தொண்டன் இறப்பதை விரும்பவும் மாட்டான்' என்று கூறிய பெருந்தன்மையான தலைவர் நம்முடைய தலைவர்.

விசாரணைக்கு ஒரு தனிப்பிரிவு அமைத்தோம். சிறப்புப் புலனாய்வுக் குழு அமைத்தார் தலைவர். ஆனால், இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் என்ன கூறினார்? `அந்தக் குழுவின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இதை உடனே சி.பி.ஐ. விசாரணைக்கு டெல்லிக்கு அனுப்புங்கள்' என்று கூறியவர்தான் இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர். அது இன்று சி.பி.ஐ. வசம் இருப்பதால்தான் முதலமைச்ச ருடைய குடுமி டெல்லியின் கைகளில் இருக்கிறது. இன்று அதனால்தான் பா.ஜ.க. என்ன கூறினாலும் அதற்கு `ஆமாம்' போட்டுக்கொண்டு, பா.ஜ.க.வுக்கு ஜால்ரா அடிக்கின்ற சங்கிக் கூட்டமாகத்தான் இங்கு இருக்கக்கூடிய டம்மி முதலமைச்சரும் அவரது அமைச்சரவை சகாக்களும் இருக்கிறார்கள்.

இதை இந்த நேரத்தில் ஏன் ஞாபகப்படுத்துகிறேன் என்றால், எந்தவிதமான பொறுப்புணர்வும் எடுத்துக்கொள்ளாத ஒரு முதலமைச்சர் இன்று வந்திருக்கிறார். அதற்கு உதாரணம், அவர் முதலமைச்சராக இருப்பதற்கு முன்னால், தேர்தல் பிரச்சாரத்தில் ஒவ்வொரு கூட்டத்திலும், அவர் கலந்துகொண்ட கூட்டமே ஐந்து கூட்டமோ, ஆறு கூட்டமோதான். தேர்தல் பிரச்சாரத்திற்குக் கூட ஒழுங்காகச் செல்லவில்லை.

ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் அதைச் செய்வேன் இதைச் செய்வேன்!

அந்த ஒவ்வொரு கூட்டத்திலும் என்ன கூறினார் தெரியுமா? `ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் மகளிர் உரிமைத்தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தித் தருகிறேன்' என்று கூறினாரே, கொடுத்தாரா? ஆனால் நம் தலைவர் கூறியது போல் 1,000 ரூபாய் கொடுத்தார்.

இப்போது இருக்கக்கூடிய முதலமைச்சர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் பிரச்சாரத்தில் 'ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் ஒவ்வொரு வீட்டிற்கும் ஆறு கேஸ் சிலிண்டர் கொடுப்பேன்' என்று கூறினாரா, இல்லையா? இதுவரைக்கும் கொடுத்திருக்கிறாரா? கொடுக்கவில்லை.

'ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் ஒவ்வோர் இளைஞருக்கும் மாதம் தோறும் 4,500 ரூபாய் உதவித்தொகை கொடுப்பேன்' என்று கூறினாரா, இல்லையா? இதுவரைக்கும் கொடுத்திருக்கிறாரா? கொடுக்கவில்லை.

எல்லாவற்றையும் விட முக்கியம், அனைத்து விவசாயிகளுக்கும் முழு பயிர்க்கடன் தள்ளுபடியை `ஆட்சிக்கு வந்த அடுத்த நிமிடம் கொடுப்பேன்' என்று கூறினாரே, கொடுத்தாரா? இப்படி எதையுமே கொடுக்கவில்லை. ஆனால், என்ன செய்தார் வந்தவுடனே? ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே என்ன செய்தார்?

நம் தயவில்தான் இன்று இந்த ஆட்சி!

ஒரு கட்சி ஆட்சி அமைக்க வேண்டும் என்றால் அவர்களுக்குக் கிட்டத்தட்ட குறைந்தபட்சம் 118 சட்டமன்ற உறுப்பினர்கள் வேண்டும். இப்போது இருக்கக்கூடிய இந்த கரகாட்ட கோஷ்டிக்கு அந்த 118 சட்டமன்ற உறுப்பினர்கள் வரவில்லை.

தமிழ்நாட்டு மக்கள் கொடுத்தது வெறும் 107 சட்டமன்ற உறுப்பினர்கள்தான். இன்று இவர்கள் ஆட்சி நடந்துகொண்டு இருப்பது நாம் போட்ட பிச்சை, தி.மு.க போட்ட பிச்சை, எங்கள் தலைவர் போட்ட பிச்சையில்தான் இன்று ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது. ஏன் கூறுகிறேன் என்றால், நம்மோடு கூட்டணி வைத்துக்கொண்டு கிட்டத்தட்ட எட்டாண்டுக் காலம் நம்முடனேயே இருந்து, நம் தலைவருடைய முகத்தைக் காட்டி, திராவிட மாடல் ஆட்சியினுடைய சாதனைகளையெல்லாம் கூறி வாக்குக் கேட்டு வெற்றி பெற்று, இன்று சட்டமன்ற உறுப்பினராகி அவர்களுடைய நம் தயவில்தான் இன்று இந்த ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது.

கூட்டணியில் இருக்கக்கூடிய சிலர் நம்முடைய தலைவரிடம் கூறிவிட்டுச் சென்றார்கள். 'குடியரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக்கூடாது. மீண்டும் மறுதேர்தல் வந்துவிடக்கூடாது. நாங்கள் செல்கிறோம்' என்று சென்றார்கள். தலைவரே அனுப்பி வைத்தார், `ஆம், குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டிற்குள் வரக்கூடாது, செல்லுங்கள்' என்றார். சிலர் கூறிவிட்டுச் சென்றார்கள். சில துரோகக் கூட்டம் சொல்லவே இல்லை, தலைவரிடம் சொல்லாமலேயே சென்றார்கள். நான் யாரைக் கூறுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும் அல்லவா? அந்தத் துரோகக் கூட்டத்தைத் தயவுசெய்து மன்னித்துவிடாதீர்கள், மறந்துவிடாதீர்கள். நிச்சயம் நீங்கள் மறக்க மாட்டீர்கள்.

அப்படித்தான் இவர் ஆட்சி அமைத்தார். முதலமைச்சர் ஆக வேண்டும் என்று அவரே எல்லாக் கட்சித் தலைவர் வீட்டிற்கும் சென்றார். வெறும் கையையா ஆட்டிக்கொண்டு சென்றார்? எல்லாருக்கும் புதிய சோஃபா வாங்கிக்கொண்டு சென்றார். புதிய சோஃபா எல்லா அலுவலகங்களுக்கும் வாங்கிக்கொண்டு சென்றார். அதுமட்டுமல்ல, நம் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு சோஃபா. அ.தி.மு.க இருக்கிறது அல்லவா, அதில் இருக்கக்கூடிய ஒரு சில தலைவர்களை மட்டும் சென்று தனியாகப் பார்த்து அந்தக் கட்சியையே இரண்டாகப் பிளந்து, அதில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினருடைய ஆதரவை வாங்கினார். அவர்களுக்கெல்லாம் வெறும் பெட்டி. கூட்டணிக் கட்சி என்றால் சோஃபா; அதிமுகவிலிருந்த சட்டமன்ற உறுப்பினர் என்றால் வெறும் பெட்டிதான்.

சட்டமன்ற உறுப்பினரையே விலை கொடுத்து வாங்கிவிட்டார்!

இப்போது இருக்கிறாரே முதலமைச்சர், அவருக்கு தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால், அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்று தோன்றும். அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால் அவர்களை எப்படியாவது தூக்கிவிட வேண்டும் என்று தோன்றும், விலைக்கு வாங்கிவிட வேண்டும் என்று தோன்றும். இவர் நம்மைக் கூறுவார், 'வாக்கிற்குப் பணம் கொடுக்கிறார்கள்' என்று நம்மைக் கூறுவார். ஆனால் இவர் என்ன தெரியுமா செய்தார்? சட்டமன்ற உறுப்பினரையே தூக்கிவிட்டார். மொத்தமாக சட்டமன்ற உறுப்பினரை வாங்கிவிட்டார். அதுமட்டுமல்ல, இப்போது ஒரு கட்சியையே இரண்டாக உடைத்து வாங்கியிருக்கிறார். கிட்டத்தட்ட ஏழு சட்டமன்ற உறுப்பினர்களை அ.தி.மு.க–விலிருந்து இந்த மாதிரித் தூக்கியிருக்கிறார். அதில் வரக்கூடிய இரண்டு இடைத்தேர்தல்தான் இப்போது வந்திருக்கக்கூடிய சட்டமன்ற இடைத்தேர்தல்.

படித்த, பண்பான வேட்பாளர்!

இந்த இடைத்தேர்தலில் நம்முடைய தலைவர் அவர்கள் உங்களிடத்தில் ஒரு நல்ல வேட்பாளரை, சிறந்த வேட்பாளரை உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். பரந்தாமன் அவர்களை உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். பரந்தாமன் அவர்களைப் பற்றி உங்களிடத்தில் நான் கூற வேண்டிய அவசியம் இல்லை. நன்கு படித்த வேட்பாளர், வழக்கறிஞர், பண்பான வேட்பாளர், கொண்ட கொள்கையில் உறுதிமிக்க ஒரு வேட்பாளர். தேர்தலுக்குத் தேர்தல் கொள்கையையும் தலைவர்களையும் மாற்றிக்கொள்கிற வேட்பாளர் கிடையாது நம்முடைய பரந்தாமன் அவர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். நீங்களெல்லாம் அவருடைய பேட்டிகளைப் பார்த்திருப்பீர்கள். அவருடைய ஒவ்வொரு பேட்டியும் ஆளுங்கட்சியைத் திணறடிக்கின்ற வகையில் இருக்கும்.

நீங்கள் எல்லாம் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறீர்கள் சட்டமன்றம் எப்படி நடக்கிறது என்று? அது மிகப்பெரிய ஒரு கேலிக்கூத்து. அந்தச் சட்டமன்றத்தில் இப்போது இருக்கக்கூடிய ஆளுங்கட்சியை, முதலமைச்சரை, அமைச்சர்களைச் சரியாகக் கேள்வி கேட்க வேண்டும் என்றால், நீங்கள் பரந்தாமன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து அனுப்ப வேண்டும்.

சட்டமன்றம் எல்லாம் பார்த்தீர்களா? நேரலையில் பார்த்தீர்களா? நன்றாக இருந்ததா? சட்டமன்றத்தில் நீங்கள் எதற்காக சட்டமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறீர்கள்?

சட்டமன்றத்தில் என்ன நடக்கிறது? வெறும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி!

உங்களுக்குப் பதிலாக உங்களுக்குப் போய்க் குரல் கொடுக்க வேண்டும், உங்கள் தொகுதியில் என்ன தேவையோ சாக்கடை வசதி, கழிவுநீர் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி இதெல்லாம் உங்கள் சார்பாக உங்கள் தொகுதியில் வேண்டும் என்று எங்களைத் தேர்வு செய்து அனுப்புகிறீர்கள். இதற்குத்தான், இந்த முக்கியப் பணிக்காகத்தான் நாங்கள் சட்டமன்றத்திற்குச் செல்கிறோம். அப்படித்தான் நாங்கள் நினைத்துக்கொண்டு சென்றோம்.

பொதுவாகச் சட்டமன்றத்திற்குச் சென்றால் நாங்கள் கேள்வி கேட்போம், அமைச்சர்கள் பதில் கூறுவார்கள். ஆனால் இப்போது சட்டமன்றத்தில் என்ன நடக்கிறது? வெறும் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி நடக்கிறது. எல்லாரும் பாட்டுப் பாடுகிறார்கள். எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் பாடுகிறார்கள், எல்லா அமைச்சர்களும் பாடுகிறார்கள். நான் சென்று சபாநாயகரிடம் கூறினால், அவரும் பாட்டுப் பாடுகிறார். சபாநாயகரிடமே கூறிவிட்டேன், `சபாநாயகர் அவர்களே, இது சட்டமன்றமா அல்லது சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியா என்று தெரியாத அளவிற்குப் போய்க்கொண்டு இருக்கிறது. எல்லாரும் பாட்டுப் பாடிக்கொண்டு இருக்கிறார்கள்' அந்த நிலைமையில் இன்று சட்டசபை போய்க்கொண்டு இருக்கிறது.

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று கூறுகிறார், 'முதலமைச்சருக்கு நன்றி'. ஏன் நன்றி? அவர் கூறுகிறார், 'எனக்கு வீடு இல்லை, வீடு வாங்கிக் கொடுத்துவிட்டீர்கள். எனக்கு வேலை இல்லை, வேலை போட்டுக் கொடுத்துவிட்டீர்கள். எனக்குக் கார் இல்லை, இப்போது காரும் கொடுத்துவிட்டீர்கள். எனக்கு இப்போது சமீபத்தில் மிகப் பெரிய ஒரு காதல் தோல்வி ஏற்பட்டுவிட்டது. அதற்கும்' உடனே முதலமைச்சர் பார்த்துச் சிரிக்கிறார், 'ராஜா, நான் ஏற்பாடு செய்கிறேன் ராஜா' என்று. ஏனென்றால் இது பெரிய மாற்றம் அல்லவா! இந்த முதலமைச்சர் அதற்கெல்லாம் திட்டம் வைத்திருக்கிறார். இப்படித்தான் சட்டமன்றம் நடந்துகொண்டு இருக்கிறது.

எந்தக் கேள்விக்கும் பதில் கிடையாது!

ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுந்து நின்று கேட்கிறார், 'எங்களுக்கு முதலமைச்சருடைய முகம் தெரியவில்லை. எங்கள் எல்லாருக்கும் தெரிகிற மாதிரி கையில் ஒரு தொலைக்காட்சி கொடுங்கள். முதலமைச்சரை நாங்கள் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்'. ஏனென்றால் இவர் பேசிச் கிழிக்கிறார் பாருங்கள்! வாயைத் திறப்பதே கிடையாது. பிடித்து வைத்த பிள்ளையார் என்பார்களே, சில நேரம் சட்டமன்றத்தில் அவர் இருக்கிறாரா இல்லையா என்றே தெரியாது.

எந்தக் கேள்விக்கும் பதில் கிடையாது. காவல்துறைக்கு இவர்தான் அமைச்சர், முதலமைச்சர்தான் பொறுப்பு. காவல்துறை மானியக் கோரிக்கையில் நான் பேசினேன். கிட்டத்தட்ட 16 கேள்விகள் கேட்டேன். சட்டம் ஒழுங்கு தமிழ்நாட்டில் எந்த நிலைமையில் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் எத்தனை கொலைகள்? நான்கு மாதங்களில் மட்டும் 500 கொலைகள், படுகொலைகள் தமிழ்நாடு முழுவதும் நடந்திருக்கின்றன. அதுவும் கோயம்புத்தூரில் மட்டும் ஒரு மாதத்தில் 10 கொலைகள் நடந்திருக்கின்றன.

கடந்த வாரம் ஒரே நாளில் எட்டு கொலைகள் நடந்திருக்கின்றன. பெண்களுக்கு எந்த இடத்திலும் பாதுகாப்பு இல்லை. உங்களுக்குத் தெரியும் வண்டலூரில் நேற்று முன்தினம் என்ன நடந்தது? ஒரு பத்தாம் வகுப்பு படிக்கக்கூடிய பள்ளி மாணவியை அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்து, அவர்களுடைய அப்பா அம்மா புகார் கொடுக்கச் செல்லும்போது 'இல்லை பாம்பு கடித்துவிட்டது' என்று பொய்ப் புகார் வாங்கியிருக்கிறார்கள். இப்படிச் சட்டம் ஒழுங்கு இவ்வளவு சந்தி சிரிக்கிறதே, இதற்குப் பதில் கூறுங்கள் முதலமைச்சர் என்று கூறினேன்.

முதலமைச்சர் ஓடிப்போய்விட்டார்!

முதலமைச்சர் என்ன தெரியுமா கூறினார்? 'இரண்டு நாள்களில் பதில், மூன்று நாள்களில் பதில் கூறுகிறேன்' என்று கூறிவிட்டு அவர் ஓடிப்போய்விட்டார். எங்களையெல்லாம் ஓடிப்போய் விடாதீர்கள் என்று கூறிவிட்டு அவர் ஓடிப்போய் விட்டார்.

இப்படித்தான் நடந்துகொண்டு இருக்கிறது இப்போது இருக்கக்கூடிய சட்டசபை. எனவே இந்தச் சட்டசபையில் உங்களுடைய உறுப்பினராக, உங்கள் சட்டமன்ற உறுப்பினராக, உங்கள் தொகுதியினுடைய விஷயங்களைப் பேசுவதற்காக, உங்களுடைய உரிமைகளைக் காப்பதற்காகப் பரந்தாமன் அவர்களை வருகிற 6–ஆம் தேதி உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும்.

100 நாள் வேலைவாய்ப்புத் திட்டம், இங்கு வந்திருக்கக்கூடிய உங்களில் பலர் அதில் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள். 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் உங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தை இந்த அரசு முறையாகக் கொடுக்கிறதா? கிடையாது. ஆனால் 100 நாள் வேலைவாய்ப்பிற்கு இப்போது தகுதி உருவாக்கியிருக்கிறார்கள். அதாவது ஆண்டு வருமானம் 21,000 ரூபாய்க்குக் கீழ் இருந்தால், கிடையாது என்று இந்த அரசு புதிய உத்தரவு போட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய ஆட்சியில் அந்த மாதிரி எதுவும் கிடையாது, வரம்பு கிடையாது, அனைவருக்கும் கொடுத்துக்கொண்டு இருந்தோம். எனவே, இதற்கெல்லாம் ஒரு சரியான தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என்றால், இப்போது இருக்கக்கூடிய இந்த அலங்கோல ஆட்சிக்கு ஒரு சரியான தண்டனை கொடுக்க வேண்டும் என்றால், வருகிற 6–ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று நீங்கள் வாக்குப்பெட்டியில் மூன்றாவது இடத்தில் பரந்தாமனுடைய பெயர் இருக்கும். பக்கத்தில் உதயசூரியன் சின்னம் இருக்கும். அதில் வாக்களித்து, ஆறாம் தேதி மூன்றாவது இடத்தில் அவர் பெயர் இருக்கும்; ஒன்பதாம் தேதி முதலிடத்தில் திரு. பரந்தாமனுடைய பெயரும் உதயசூரியன் சின்னமும் வர வேண்டும்.

மதுராந்தகத்தில் மீண்டும் உதயசூரியன் வெற்றி பெற்றுவிட்டது, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுவிட்டது என்ற செய்தி வருகிற ஒன்பதாம் தேதி வெற்றிச் செய்தியாக வர வேண்டும். நீங்கள் அத்தனை பேரும் முடிவு செய்துவிட்டீர்கள், இந்தத் தேர்தலில், இடைத்தேர்தலில் தி.மு.க–வை வெற்றி பெற வைக்க வேண்டும், பரந்தாமனை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று நீங்கள் முடிவு செய்துவிட்டீர்கள். நான் உங்களிடத்தில் வைக்கிற வேண்டுகோள் எல்லாம் ஒன்றே ஒன்றுதான்.

உடைந்து போன டேப் ரெக்கார்டர்!

என்ன ஆயிற்று லண்டனில்? எனக்கு எப்படித் தெரியும்? ஈர்க்கச் சென்றார், முதலீட்டை ஈர்க்கச் சென்றார். தொழில்துறை அமைச்சரே இல்லாமல், தொழில்துறைச் செயலாளர் இல்லாமல் வரலாற்றிலேயே ஒரு முதலமைச்சர் தொழில்துறை ஈர்க்கப் போகிறேன் என்று கூறி? அதற்கு மேல் பேச மாட்டேன். அவர் முதலமைச்சராக இருக்கிறார் அல்லவா, இரண்டு நாள்களுக்கு முன்னால் மதுராந்தகம் வந்தார் தெரியுமா? பிரச்சாரம் செய்தார் தெரியுமா? என்ன பேசினார்? யாராவது கேட்டீர்களா? என்னை என்னுடைய நண்பர்கள் யாராவது கேட்பார்கள், 'என்னங்க முதலமைச்சர் இன்று பேசியிருக்கிறார், கேட்டீர்களா?' என்று கேட்பார்கள். நான் என்ன தெரியுமா கூறுவேன்? 'அட என்னங்க, எப்போது வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளலாம். அவர் எப்போது பேசினாலும் ஒன்றுதான் பேசுவார். உடைந்து போன டேப் ரெக்கார்டர் போன்று பேசியதையே பேசிக்கொண்டு இருப்பார்'. அதனால் இன்று அந்த நேற்று முன்தினம் மதுராந்தகத்தில் பேசினார் அல்லவா, அதை யாராவது கேட்கத் தவறவிட்டிருந்தால், கவலைப்படாதீர்கள். மீண்டும் இரண்டு நாள்கள் கழித்து அதேதான் பேசுவார்.

நான் சொல்கிறேன், மதுராந்தகத்தில் நேற்று முன்தினம் 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். முதலமைச்சர் கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் பேசியிருக்கிறார். அதில் 34 முறை தி.மு.க தி.மு.க. தி.மு.க தி.மு.க திமுக! பேசுகிற நிமிடங்களை விட அதிகம். அவர் பேசியதில் 34 முறை திமுக, ஒரே ஒரு முறை டி.எம்.கே. ஏனென்றால் அவருக்கு ஆங்கிலம் தெரியும் அல்லவா!

அதுமட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இரண்டரை வருடங்களாக இதைத்தான் பேசிக்கொண்டு இருக்கிறார். இப்போது என்ன தெரியுமா கூறுகிறார்? 'ஏன் நான் முதலமைச்சர் ஆகக்கூடாதா?' என்று கேட்கிறார். முதலமைச்சர் ஆனதை அவரே இன்னும் நம்பவில்லை. நாம் நம்பவில்லை அதை விடுங்கள், இன்னும் அவர் நம்பவே இல்லை.

நான்கு மாதங்களுக்குப் பின்னால் இருக்கிறார். விஜய் சேதுபதி ஒரு திரைப்படத்தில் தலையில் அடிபட்டு எழுந்து கேட்பார் அல்லவா, 'என்ன ஆயிற்று? நான் எங்கே இருக்கிறேன்?' என்று கேட்பார். அதுபோன்று இருக்கிறார் முதலமைச்சர். அது லண்டன் சென்றுவிட்டு வந்ததனால் அல்ல, நான்கு மாதங்களாகவே அப்படித்தான் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, எங்கு சென்றாலும் என்ன தெரியுமா பேசுவார்? ஒரு பெரிய வசனம். என்னவென்றால், தி.மு.க.வைக் கூறி 'ஓம் சக்தி பராசக்தி'. சரியா? இப்போது நான் ஒன்று கூறுகிறேன். இப்போது இவ்வளவு நேரம் அவர் கூறினார் அல்லவா, அவர் எதிர்க்கட்சியாக இருந்தார். 'என்னவோ பேசிவிட்டுப் போகட்டும்' என்று விட்டு விட்டோம். நாம் ஆளுங்கட்சியாக இருந்தோம். இப்போது நாம் எதிர்க்கட்சி ஆகிவிட்டோம். இப்போது நாம் என்ன வேண்டுமானாலும் பேசலாம். இப்போது நாம் அவர் கூறியதற்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா? திருப்பி வட்டியோடு கொடுக்க வேண்டுமா, வேண்டாமா? அதனால் இப்போது நான் கூறுகிறேன், நீங்கள் திருப்பிச் சொல்லுங்கள்.

ஓம் காளி! ஜெய் காளி! ஓம் காளி! ஜெய் காளி! (கூட்டத்தினர் த.வெ.க ஒரு ஓடுகாலி! என்கின்றனர்.)

இனிமேல் நாம் எந்தப் பிரச்சாரக் கூட்டம் நடத்தினாலும், எந்தக் கூட்டம் நடத்தினாலும், இதை ஒரு நான்கு முறை கூறிவிட்டு தொடங்குவோம். அவர் பெயரைச் சொல்லாதீர்கள். அழுதுவிடுவார், அவர் கட்சிப் பெயரைச் சொல்லிக்கொள்ளுங்கள். அதைச் சொல்லித்தான் நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இந்தத் தேர்தல் நமக்குக் கிடைத்திருக்கிற சரியான வாய்ப்பு!

இந்தத் தேர்தல் நமக்குக் கிடைத்திருக்கிற சரியான வாய்ப்பு. இந்த ஆட்சி சரியான முறையில் நடைபெறவில்லை. ஒரு காமெடி ஆட்சி நடந்துகொண்டு இருக்கிறது என்பதை இந்தத் தேர்தல் மூலமாக இந்த அரசுக்கு நாம் புரிய வைக்க வேண்டும். இந்த முதலமைச்சரைத் தட்டி எழுப்ப வேண்டும். தூங்கிக்கொண்டு இருக்கிற முதலமைச்சரை எழுப்புவதற்கு, நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஒரு நல்ல ஆயுதம்தான் உங்களுடைய வாக்கு. ஆறாம் தேதி உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, திரு. பரந்தாமன் அவர்களை மிகப்பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைக்க வேண்டும். உங்களை எல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், தலைவருடைய மகனாக இருந்து கேட்கிறேன், இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் டாக்டர் கலைஞருடைய பேரனாக இருந்து கேட்கிறேன் உதயசூரியன் சின்னத்திற்கு, திரு. பரந்தாமன் அவர்களுக்கு வாக்களியுங்கள். மிகப்பெரிய வெற்றியைத் தேடித் தாருங்கள். உங்களுடைய அன்புக்கும், வரவேற்புக்கும் நன்றி, நன்றி, நன்றி!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள்

தேர்தல் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாவட்டக் கழகச் செயலாளர் சுந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் தரணிவேந்தன், செல்வம், சி.என்.அண்ணாதுரை, முன்னாள் துணை சபாநாயகர் பிச்சாண்டி, உதயசூரியன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், அமுலு பொன்மலர், சிவக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அம்பேத்குமார், வசந்தம் கார்த்திகேயன், எஸ்.கே.பி.கருணா, சி.வி.எம்.பி.எழிலரசன், மகாலட்சுமி யுவராஜ், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், அப்துல் மாலிக், இளையராஜா, ஜி.பி. ராஜா, பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் யுவராஜ், கோல்டு பிரகாஷ், எவரெஸ்ட் நரேஷ் குமார், அருண்ராஜ், தினகரன், ஆனந்த், இளைஞர் அணி துணை அமைப்பாளர் பால்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.